முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1071

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.09.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அறமெனும் வேலி கொண்ட அரங்கனே
அன்னதான சேவையாற்றும் தேசிகனே
வரம்பெற்று என் சக்தியாகவே
வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென உன் வழி மக்கள் கூட்டம்
வணங்கி என் வழிபாட்டை செய்து வர
3. வருவதே இந்த கலியுகத்தில் இடரை வெல்லும்
வல்லமையான பெரும் ஞானமாகும்
தருகின்ற உன் தர்மத்தை எவர் ஏற்று
தரணி எங்கும் உன் சேவையாக செய்கின்றாரோ
4. வருமுலகில் அவர்களெல்லாம் தர்மபலம் கூடி
வல்லமையான வினையை முழுமைபட வென்று
வென்றுமே கலியுகத்தையே காக்கும்
வேலவன் என் சக்தியாக ஆற்றல்பெறுவர்
5. தெளிவுபட உன் தொடர்பை கூட்டியே
தொண்டு செய்து உயர் சீடர்களாக மாறி
மாறியே கலியுகத்தில் என் வழிபாடு தன்னை
மக்களுக்கு கொண்டு செல்லும் அன்பர்கள் அனைவரும்
6. ஆக்கமுடன் ஞானவான்களாக உருவெடுத்து
அகிலத்தை மாற்றம் செய்யும் அதீத சக்தி படைத்தவர்களாகி
ஆகியே அரங்கன் உன் வழி ஆற்றல்பட
அழியாமை என்கின்ற மகா வரத்தை பெற்று
7. பெற்றுமே உலகோர் பேரின்பகதியோடு பிசகின்றி அரங்கன் உன்னால்
ஆற்றல்மிக்க ஞானிகள் ஆகி அகிலத்தை ஞான லோகமாக மாற்றும் அற்புதங்கள் படைப்பர்
ஆகவே அரங்கன் தொடர்பு கூடினால்
அகிலத்தில் அன்பர்களுக்கு அழியாமை உறுதியாகும்
8. உறுதிகொண்டு அரங்கன் தர்மத்தை செய்தால்
உலகமே பாதுகாப்பைக் கண்டு இனிவரும் காலம்
பேரிடர் பிறதுன்பம் பற்றாது
பெருமைமிக்க ஞான பூமியாக உருவெடுக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–